International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 - 2 April - June 2026

Published on 14, April - June 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# சங்ககாலத் தலைவியின் ஆளுமைப்பண்பு

**முனைவர் ஏ. மா. கவிதா**
தமிழாய்வுத்துறை
உதவிப்பேராசிரியர்
மூகாம்பிகை கலை மற்றும் அறிவியல் கல்லூரி (மகளிர்)
மல்லுப்பட்டி, பாலக்கோடு, தர்மபுரி

***Abstract***

Sangam poems reveal the lifestyle practices and social events of ancient Tamils. These poems are a great help in understanding the lives of people who lived 2000 years ago during the Sangam era. The Sangam poets categorized life into 'Akam' (inner) and 'Puram' (outer) and composed poems based on it. All life traditions are common to all people. Specifically, the Sangam Akam poems mention events based on the lifestyle norms of men and women living together, categorized as 'Kalavu' (pre-marital love) and 'Karpu' (marital life). The events mentioned in the Akam poems greatly help us understand the greatness of women in Sangam society. The participation of women in Sangam Akam life, their lifestyle excellence, and leadership qualities are researched.

**ஆய்வுச்சுருக்கம்**

தொல்தமிழர்களின் வாழ்வியல் வழக்காறுகளை, சமூக நிகழ்வுகளை எடுத்துரைப்பன சங்கப் பாடல்கள் ஆகும். இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்க காலத்தில் வாழ்ந்த மக்கள் வாழ்க்கையை அறிவதற்குப் பெருந்துணை புரிவன சங்கப்பாடல்களே. சங்கப் புலவர்கள் சங்க கால வாழ்வியலை, அகமும், புறமுமென வகுத்துக் கொண்டு, அதன் அடிப்படையில் பாடல்களைப் படைத்தளித்தனர். வாழ்வியல் மரபுகள் யாவும் அனைத்து மக்களுக்கும் பொதுவானவை. குறிப்பாக, ஆணும், பெண்ணுமாக இணைந்து வாழும் வாழ்வியல் நெறிகளை களவெனவும், கற்பெனவும் வகுத்து, அதன் அடிப்படையில் வாழ்ந்த நிகழ்வுகளையே சங்க அகப்பாடல்கள் குறிப்பிடுகின்றன. சங்ககால மகளிர் மேன்மைகளை அறிவதற்கு அகப்பாடல்களில் குறிப்பிடும் நிகழ்வுகள் பெருந்துணை புரிகின்றன. சங்க அகவாழ்வில் மகளிர் பங்களிப்பு, வாழ்வியல் மேன்மை , ஆளுமைத் தன்மை ஆகியன ஆராயப்பெறுகின்றன.

**முதன்மைச் சொற்கள்**

சங்கப் பாடல்கள், தமிழர்கள், வாழ்வியல் நடைமுறை, சமூகம், மேன்மை

ஒருவரது அல்லது தனித்துவம், தனித்தன்மை, சிறப்பு வாய்ந்த கூறுகள், பன்முகப்பட்டப்

பண்புகள், சுயத்தன்மை, தன்னுணர்ச்சி போன்றவையும் ஆளுமையாகக் குறிப்பிடலாம். ஒருவர் அல்லது ஒன்று, மற்றவர் அல்லது மற்றையதில் விளைவிக்கும் பாதிப்புகள், தாக்கங்கள் ஆகியவற்றை ஆளுமை. Personality, Individuality, distinctive Character பலநிலைகளில் ஆங்கிலத்தில் குறிக்கப் பெறுகிறது. ஆங்கிலத்தில் ஒருவனுடைய பண்புகளைக் குறிக்கும் வெளித்தோற்றம் என்னும் பொருளில் 'பெர்ஸ்னாலிட்டி' என்று வழங்கப்படுகிறது. "ஆளுமை என்பது தனி மனிதனுடைய எண்ணங்கள், செயல்பாடு முறை அவன் பிறருடன் பழகும் முறை, அவனுடைய வாழ்க்கைத் தத்துவம், அறிவாற்றல், உணர்ச்சிகள் இவையனைத்தும் சேர்ந்த தொகுப்பிலிருந்து அவனுக்கு ஏற்படும் ஒருதனித்தன்மையே ஆளுமை" என்று வாழ்வியல் களஞ்சியம் குறிப்பிடுகிறது.

க்ரியா தற்காலத்தமிழ் அகராதி, ஆளுமை என்பதற்கு "ஒரு மனிதனின் தனிப்பட்டக் குணத்தொகுப்பும் முரட்டுத்தனமும் ஆளுமையின் வெளிப்பாடுதான்" என்று குறிப்பிடுகிறது. ஒருவன் ஒரு குறிப்பிட்டச் சூழ்நிலையில் நடந்து கொள்ளும் விதமும், உணர்தலும், எண்ணுதலும் அவனுடைய மனநிலையைப் பொறுத்து அமைகிறது. ஒரு மனிதனுடைய வெளித்தோற்றம் அல்லது பண்பு என்பவை ஆளுமை ஆகும். ஆளுமையானது மனம், உடல் ஆகியவற்றின் தொகுதி' என்கிறார் மகாத்மா காந்தி. ஆகமொத்தத்தில் ஆளுமை என்பது ஒருவரிடமிருந்து மற்றவரைப் பிரித்துக் காணும் அவரது தனித்தன்மையே ஆளுமையாகும். அந்த பகையில் தலைவியின் சொல்லாற்றல் மூலம் அவளது ஆளுமையை வெளிப்படுத்துவதே இவ்வியலின் நோக்கமாகும்.

## தொல்காப்பியர் சுட்டும் தலைவி

தொல்காப்பியர் தலைவி பேசக்கூடிய நிலைகளை எல்லாம் குறிப்பிட்டுள்ளார். இதனை, *"உரிமை கொடுத்த கிழவோன் பாங்கின் பெருமையில் திரியா வன்பின் கண்ணும் கிழவனை மகடூஉப் புலம்புபெரி தாகலின் அலமரல் பெருகிய காமத்து மிகுதியும்"* - தொல்.பொரு.கற்பு. நூ.145:3-6.

இந்நூற்பாவின் மூலம் வழிமொழிகிறார். தலைவன் தன்னை விட்டுப் பிறரிடம் சென்று மீண்டும் வரும்போது, போகாதக் காலத்தில் போவெனவும் தலைவி கூற்று நிகழும் என்பார். இதனை,

**"தங்கிய ஒழுக்கத்துக் கிழவனை வணங்கி**

**எங்கையர்க் குரையென இரத்தற் கண்ணும்**

**செல்லாக் காலைச்செல்கென விடுத்தலும்'"**

- தொல்.பொ.கற்பு.,145,15-17

இப்பாடல் வரிகள் உணர்த்துகின்றன. மருதநில தலைவி பல்வேறு இடங்களில் தொல்காப்பியர் சுட்டும் தலைவியாகவே வாழ்கிறாள். சில இடங்களில் வேறுப்பட்ட பண்பைக் கொண்டவளாகத் திகழ்கிறாள். தலைமகள் தலைவனிடம் அன்பு தோன்ற சொல்வதை,

**"புணர்ந்துடன் போகிய கிழவோள் மனையிருந்து**

**இடைச்சுரத் திறைச்சியும் வினையும் கட்டி**

**அன்புறு தக்க கிளத்தல் தானே**

**கிழவோன் செய்வினைக்கு அச்சமாகும்"**

- தொல்.பொரு.கற்பு. 146

இந்நூற்பா உணர்த்துகின்றது. மேலும் தலைவி ஊடல் கொள்வதை இந்நூற்பாவின் வழி விளங்கலாகின்றது.

**"உணர்ப்புவரை இறப்பினும் செய்குறி பிழைப்பினும்**

**புலத்தலும் ஊடலும் கிழவோற்குரிய"** -

தொல். பொரு.கற்பு, நூ. 154

இவ்வகையில் பார்க்கையில் மருதநிலத் தலைவியும் ஒத்துக்காணப்படுகிறாள் சில இடங்களில் சிறிது மாறுபட்டவளாகக் காணப் படுகிறாள். தலைவனுக்கு இரங்கல் செய்யேன் என வாயில் மறுத்தல், தலைவன் பேசுவதெல்லாம் பொய்யென்று உரைத்தல் அதற்காக தலைவனைக் குற்றம் சாட்டல் என மருதநிலத்தலைவி பிற நிலத்தலைவிகளிடம் வேறுபட்டவளாகவே விளங்குகிறாள். 35 மருதக்கலிப் பாடல்களில் 21 பாடல்கள் தலைவி கூற்றுநிலைப் பாடல்களாகவே உள்ளன. பிற அகஇலக்கியப் பாடல்களில் தலைவியை ஒத்துப்போகும் தலைவிகளும்

உள்ளனர். ஆனால் மருதக்கலியின் தலைவியோ அவர்களிடமிருந்து சிறிது மாறு பட்டவளாக காணப்படுகிறாள் என்பதை மருதக்கலியின் வழி அறிய முற்படுவதே இவ்வியலின் நோக்கமாகும்.

**சங்ககாலப்பெண்**

"உரிமை என்பது ஒருவர் கொடுப்பதுமன்று மற்றொருவர் வாங்குவதுமன்று அஃது எவரிடத்தும் எவ்விடத்தும் இயல்பாய் அமைந்து கிடப்பது என்கிறார் திரு.வி.க. சங்க காலத்தில் பெண்ணின் இயற்கை உணர்வுகள் தந்தைவழிச் சமுதாயத்திற்கேற்ப மாற்றமடைந்து மேலாளராக, நிர்வாகியாக இருந்து குடும்பத்தைக் காத்து வருபவள்தான் பெண். பெண்ணின் தலையாய கடமையாக விருந்தோம்பல் என்னும் பண்பை, விருந்து எதிர்கொள்ளவும், பொய்ச்சூள் அஞ்சவும் அரும்பெறல் புதல்வனை முயங்கக் காணவும் ஆங்கு அவிந்துஒழியும் என் புலவி தாங்காது அவ்அவ் இடத்தான் அவை அவை காண பூங்கண் மகளிர் புனைநலம் சிதைக்கும் மாய மகிழ்நன் பரத்தைமை நோவென், தோழி கடன் நமக்கு எனவே கலி, மருதக்கலி. 75; 27-33.

இப்பாடலடிகள் உணர்த்துகின்றது. மேலும் பெண்ணின் எண்ணமும் செயலும் இல் வாழ்வின் தடையற்ற நலனை மட்டுமே உட் கொண்டு அமைதலைப் புலப்படுத்தகின்றன. விருந்தின் மேன்மையால் தலைவி தலைவன் மீது கொண்ட ஊடலைத் தணித்துக் கொள்கிறாள். என்பதனை,

**விரி உளைக்கலிமான் தேரொடு வந்த**
**விருந்து எதிர்கோடலின், மறப்பல்**

மருதக்கலி. 75; 16-17

இப்பாடலடிகளின் வழியே அறியலாகின்றது. நாள்தோறும் தலைவனின்பால் ஏற்படும் கோபத்தை மறந்து ஏற்றுக்கொண்டு வாழும் பெண்ணாகத் திகழ்வதை அறியமுடிகிறது.

**தலைவியின் பேச்சுத்திறன்**

"ஆணின் பரத்தமை ஒழுக்கத்தை சங்கச் சமூகம் சுட்டிக்காட்டி காட்டிற்றேயொழிய அதை கடிந்து பேசியதாக எவ்விடத்திலும் குறிப்பிடவில்லை" என்று அமீதாராணி குறிப்பிடுவதை நற்றிணையில்,

**எம் நறந்து உறைவி ஆயின்யாம் நறந்து**
**நல்கினம் அளித்தல் அறியாது அவட்கவன்**
**காதலன் என்றுமோ உரைத்திசின் தோழி**
- நற். 1-4

இப்பாடல்வரிகள் உணர்த்துகின்றன. சங்க காலத்திலே ஆண்கள் பெண்களிடத்தே காட்டியநிலையற்றத்தன்மை உணரமுடிகிறது.

**நோதக்காய் என நின்னை நொந்தீவார் இல்வழி**

**முன் அடிப் பணிந்து, எம்மை உணர்த்திய வருதிமன்** -கலி 73:6-7

என்ற பாடலடிகள், தலைவன், என்ன செய்தாலும் அவனைக் கண்டித்து இத் தவறுகள் செய்யாதே என்று கூறுபவர் யாரும் இல்லாததினால் தன்முன்னே வந்து அடிப்பணிந்து ஊடல் தீர்க்க வேண்டி நிற்பதை உணர்த்துகின்றது. பெண்டிர்க்குக் கற்பொழுக்க வலியுறுத்தப்பட, ஆடவர் பரத்தமை ஒழுக்கத்தில் திளைத்துப் பொழுதைக் கழித்து வாழ்ந்ததை உணர்த்தி நிற்கின்றதை அறிய முடிகின்றது.

**சேக்கை இனியார்பால் செல்வான் மனையாளால்**

**காக்கை கடிந்து ஒழுகல் கூடுமோ கூடா**

**தகவுடை மங்கையர் சான்றாண்மை சான்றோர்"** - -பரிப்பாடல், 20; 86-88

என்ற பாடலடிகள், "பாதிக்கப்பட்டப் பெண்கள் பதிவாத மாதராகியும், அதனை இயல்பாக எண்ணி ஏற்றுக்கொள்ளுமாறு சங்கச்சமூகம் பெண்ணுக்கு அறிவுறுத்தியுள்ளது என்ற சிவகாமியின் கருத்தோடு ஒன்றிப்போவதை அறியமுடிகிறது. தலைவனின் குற்றங்களை உணர்த்துவதை,

**என்னை நீ செய்யினும், உரைத்தீவார் இல்வழி**

**முன்அடிப் பனிந்து, எம்மை உணர்த்திய வருதிமன்** - கலி. மருதக்கலி, 73; 14-15

என்பதை உணர்த்துகின்றது. பரத்தையிடம் போய்வரும் தலைவனைப் பார்த்து தலைவி சில மொழிகளை காணப்படுகிறாள். எடுத்துரைக்கும் தன்மை பொருந்தியவளாகக்

மண்டுநீர் ஆரா மிலிகடல் போலும் நின்

தண்டாப் பரத்தை தலைக்கொள்ள, நாளும் புலத்தகைப் பெண்டிரைத் தேற்றி, மற்றுயாம் எனின் தோலாமோ நின்பொய் மருண்டு மருதக்கலி, 73; 19-22, என்பதை என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன. தன்னிடம் சொல்ல வேண்டியது எதுமில்லை வேண்டு மென்றால் தனக்கு தங்கையாகிவிட்டப் பரத்தையிடம் சொல்லச் சொல்வது தலைவனின் மீது தலைவி கொண்ட கோபமே காரணமாக அமைகின்றது. இச்செயலால் தலைவிக்கு ஏற்படுவதெல்லாம் ஏக்கமும், மனஉளைச்சலும், மனமுறிவும், ஏமாற்றமும் தான், இதுவே தலைவியின் நிலையாக உள்ளது என்பது தென்படுகிறது.

### பெண்ணின் நிலை

"பெண்ணின் பேச்சைக் கேட்காதவர்கள் இறைவனைவிட மேலானவர்கள்"" என்று ஏலாதி குறிப்பிடுகிறது. "பெண்டு என்பதற்கு பெண்" என்று பொருள் தருகிறது க்ரியா. நர்மதாவின் தமிழகராதியும் 'பெண்டு என்பதற்கு, பெண், மனைவி" என்று பொருள் தருகிறது. தமிழ் லெச்சிகன் “பெண் என்று பொருள்" தருகிறது. இவ்வாறு அகராதிகள் எல்லாம் 'பெண்டு' என்பதற்கு 'பெண்', 'மனைவி' என்று பொருள் தருவதெல்லாம் சங்ககால மகளிரைச் சுட்டுவதாகவே அமைகிறது. சங்ககால மகளிரைப் பெண்டு என்று அழைப்பதற்கு காரணமானவர்கள் பரத்தையர்கள் தான். மனைவியாகவும், இல்லத்தரசியாகவும் வாழும் தலைவியைப் பெண்ணாக மதித்தும் பெண்ணிற்குரிய உரிமை கொடுத்தது புலப்பட்டாலும் பெண்ணின் உணர்வுக்கு மதிப்பளிக்கும் விதமாகத் தலைவன் செயல்படவில்லை என்பது அவனின் பரத்தமை குணத்தினால் தென்படுத்தி விடுகிறது. தலைவனின்

### தலைவியின் சொல்வன்மை

"கற்பென்றால் தலைவியின் மனநிறை, மனத்தின்மை தலைவன் மீது கொள்ளும் அன்பு, விருந்தோம்பல், தலைவனின் பரத்தை ஒழுக்கத்தைக் கடிந்து அவனை திருத்தி ஏற்றுக்கொண்டு குடும்பக் கட்டுக்கோப்பு கலையாமல் காத்தல்"" என்று சண்முகம் குறிப்பிடுகிறார். இவ்வாறு பெண்ணுக்குக் குறிப்பிடும் தன்மைகள் கொண்டு சங்கத் தலைவி வாழ்கிறாள். இத்தகைய வாழ்வை மருதநிலமங்கை வாழ்ந்திருக்கிறாள் என்பதை மருதக்கலிப் பாடல்களின் வழி அறியலாம்.

பிரிவைக் கனவிலும் நினைந்திராத தலைவி தன் புதல்வன் மீது தலைவன் கொண்டன்பு காரணமாகத் தன்னை பிரிய மாட்டான் என்பதை,

*பூங்கண் புதல்வனைப் பொய்பல பாராட்டி*
*நீங்காய் இகவாய் நெடுங்கடை நில்லாதி*
*ஆங்கே அவர்வயின் சென்றீ -*
*அணிசிதைப்பான்*

*ஈங்கு எம்புதல்வனைத் தந்து மருதக்கலி,* 79:20-23

சங்க இலக்கியம் இசைக்கலைஞர்கள்பற்றிய செய்திகள் பலவற்றை வெளிப்படுத்தியுள்ளன. வீரயுகக் காலத்தில் முதன்மை மாந்தராகச் செயல்பட்ட பாண் மரபினரை அக்கால இலக்கியங்கள் பொருளடக்கத்தின் மூலம் வெளிப்படுத்தின. பாண் மரபினர் குழுவாக வாழ்ந்தனர். குழுவில் அனைவரும் பங்கு பெற்று நிகழ்வு களை வடிவமைத்துக் கொண்டனர். ஆண் கலைஞர்கள் பல்வேறு பெயர்களில் குறிக்கப்பெற்றனர். அப்பெயர் கள் பாணர் என்பத னையே மிகுதியாகக் குறிக்கின்றன. பெண் கலைஞர்களாக ஆடு மகள், கிணைமகள், பாடினி, பாண்மகள், பாடுமகள், விறலி என ஆறு கலைஞர்களை சங்க இலக்கியம் சுட்டுகிறது.என்ற வரிகள் உணர்த்தி நிற்கின்றன. மேலும் தலைவி,

**"தெய்வந் தொழஅள் கொழுநன்தொழு**
**தொழுவாள்**

**பெய்யெனப் பெய்யும் மழை "** குறள்.15

எனும் வள்ளுவரின் வாய்மொழிக்கேற்ப வாழ்பவளாகவும் இம்மருத நிலமங்கை வாழ்ந்திருக்கிறாள் என்று கூறினால் அது பொருத்தமாகும். தன்னைவிட்டுச் செல்ல மாட்டான் என்றக்காரணத்தால் துணிச்சலு டன் 'பரத்தையிடம் செல்க' என்றுரைப்பது தலைவன் மீது கொண்டன்பின் வெளிப் பாடாகும். இவ்வாறு தலைவனோடு தலைவி சொல்லாடல் செய்கிறாள். தலைவனின் செயல் தவறானது என்பதை உணர்ந்திருந் தும் அவனைத் திருத்தி இல்லறமாண்புடன்

வாழும் சிறந்த பெண்ணாகவே மருதநில மங்கை வாழ்ந்திருக்கிறாள் என்பதை புலப்படுத்துகிறது.

**ஆடுமகள்**

ஆடுமகள் என்பவர் பாண்மரபைச் சேர்ந்த பெண்ணாவார். இச்சொல்லுக்கு விறலி என்றே உரையாசிரியர்கள் பொருள் தருகின்றனர். ஆடுதல் என்பது இவர்களுடைய முதன்மையான தொழிலாக அமைந்துள்ளது.மூங்கில் கழிகளுக்கு மத்தியில் கட்டப் பட்ட கயிற்றினிடையே பல்வேறு இசைக்கருவிகளுக்குத் தக ஆடுவாள். மயில் ஆடுவதைப்போன்று வெறியாட்டக்களத்தில் ஆடுமகள் நடுங்கி ஆடுவாள் எனும் செய்திகளை,

**அரிக்கூடு இன்னியம் கறங்க ஆடுமகள்**

**கயிறுஊர் பாணியில் தளரும் சாரல்** 193-194

**அறியா துண்ட மஞ்ஞை ஆடுமகள்**

**வெறியறு வனப்பின் வெய்றுற்று நடுங்கும்** - குறு 105:3-4

எனும் பாவடிகள் விளக்குகின்றன. ஆடுமகளைத் தவிர பிறர் யாரும் நெருங்க முடியாத இயல்பையுடைய ஆய் அண்டிரனுடைய மலையாகும். ஆண் கலைஞர்களுக்கு எந்த விதத்திலும் குறை படாமல் பாடல் ஆடல் கருவி இசைத்தல் பரிசில் கேட்டல் பரிசில் பரிசல் நிலையி லிருந்து இணையாக செயல்பட்டு உள்ளனர் பெண்கள். சங்கப்பாக்கள் அதிகளவில் பேசியதே போன்று பிறஇலக்கியங்கள் பெண் கலன்களை பேசவில்லை என்பது குறிப்பிடத் தக்கதாகும். சங்ககால பெண் கலைஞர்களின் இசைப்புலமையும் ஆளுமை தன்மையும் இவ்விடத்தில் வெளிப்படுகிறது என்றே கூற வேண்டும்.

**தொகுப்புரை**

தலைவனின் குற்றமானச் செயல்களை எல்லாம் நினைத்து பெரிதும் வருத்தமுறு பவள் தான் தலைவி.

தமிழரின் சிறந்த பண்பான விருந்தோம்பல் மாண்பின் சிறப்பை காக்கும் இல்லத்தரசி யாகத் திகழ்ந்துள்ளாள்.

தலைவனின் தவறை மறந்து தன்நெஞ்சம் தலைவனை ஏற்றுக்கொள்வதினால் தன்னுடைய இயலாமை உரைத்தல்.

பெண்ணுக்குரிய இயல்புகளை சில இடங்களில் எடுத்துரைக்கிறார் நாகனார். தலைவனை எதிர்த்து நேரே பேசுபவளாக தலைவி காணப்படுகிறாள்.

ஆண், பெண் என்ற வேறுபாடைத் தவிர சொல், செயல், அறிவு என்ற கூறுகளில் வேற்றுமை கிடையாது என்பதை நிலைநாட்டுகிறார்.

உலகியல் வாழ்க்கைக்கு ஆணும், பெண் ணும் இன்றியமையாதத்துணை என்பதற் கேற்பவும் தலைவி விளங்குகிறாள் என்கிறார்.

குழந்தையைப் பெற்றுவளர்ப்பதில் சிறந்த தாயாக செயல்படுகிறார் விளையாடும் தன் மகனுக்கு அவன் தந்தைபாலுள்ள குணநலன் களையும் குறைகளையும் எடுத்தோதி குறைகளின்றி வாழ சிறந்த குணநலனை தன் மகனுக்கு கற்பிக்கும் தாயைக் குறிப்பிடுகிறார்.

கல்வி கேள்விகளால் உண்டாகும் திண்ணிய அறிவொழுக்கம் கற்பு என்று தமிழ்ச் சான்றோரால் குறிப்பதற்கேற்ப தலைவி கற்பு கரசியாக விளங்குவதைக் குறிப்பிட்டுள்ளார்.

கணவன்பால் காணப்படும் குறையை நன்கு கணவனுக்கு உளர்த்தி கணவனைப் பேணியும் வாழ்பவள் தான் பெண் என்பதைக் காட்டியுள்ளார். நன்னெறில் வாழ்வதே சங்க காலத் தலைவியின் பண்பாக இருந்திக்கிறது.

தன்நிலையை நிர்ணயிக்கும் போர்க்கருவியாக தலைவியின் பேச்சு உள்ளது.

இன்றைய வளர்ச்சி பெற்ற காலத்தில் பெண் கலைஞர்களுக்கு உரியமரியாதை இணையாக மதிக்கும் நிலை இல்லாதபோது சங்க காலத்தில் போற்றப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**முடிவுரை**

பெண்ணியச் சிந்தனைக்கண் கொண்டு நோக்கினால், சங்ககாலம் ஓர் ஆணாதிக்கச் சமுதாயமாக இருந்திருக்கிறது. தலைவனின் பரத்தமை ஒழுக்கத்தினால் பெண் எந்தளவு பாதிக்கப்படுகிறாள் என்பதைவிட, எத்தகை மனச்சிதைவுக்கு ஆளாகிறாள் என்பதை

உணரமுடிகிறது. இத்தகைய பலபோக்குகள் நிறைந்தவளாக சங்க காலத் தலையியைப் படைத்துள்ளனர் சங்கப் புலவர்கள். பெண்ணிய மொழி அடிமனதின் நீரோட்டத்தில் எழு அனுபவங்களை, எண்ணங்களை, வரைமுறையான கட்டமைப் பிற்குள் கொண்டு வராமல் உணர்ந்ததை அப்படியே உணர்ந்தபடி சொற்களில் வெளிப்படுத்துகின்றார் என்பது திண்ணம்.

**சான்றெண் விளக்கம்**


1. வாழ்வியல் களஞ்சியம், தொகுதி-2, ப. எண். 678.
2. க்ரியா தற்காலத் தமிழகராதி, ப. எண். 121.
3. திரு.வி.க.பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத்துணை, ப. எண். 33.
4. சிலப்பதிகாரம், 5: 224.
5. நூ.அமீதாராணி, சங்க கால மகளிரின்நிலை, ப. எண். 120.
6. ச.சிவகாமி, சங்கத்தமிழியல், ப. எண். 41.
7. ஏலாதி, 5, 20.
8. க்ரியா தற்காலத் தமிழகராதி, ப. எண். 1009.
9. நர்மதாவின் தமிழகராதி, ப. எண். 690.
10. (Tamil Lexicon) தமிழ் லெக்சிகன், ப. எண். 2858.
11. இரா, சண்முகம், சங்க இலக்கியங்களில் வரைவு கடாதலும் அறத்தொடு நிற்றலும், ப. எண். 249.
12. கவிஞர். குடந்தையன், கற்பெனும் சிறையினிலே, ப. எண். 65.
13. மேலது, ப. எண். 4.
14. சீவக சிந்தாமணி, ப. எண். 1226.


**துணைநூற்பட்டியல்**


1. அழகம்மை,கே.பி., சமூக நோக்கில் சங்க மகளிர், மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர் தெரு, பாரிமுனை, - 108. முதற்பதிப்பு - ஆகஸ்ட், 2001
2. கலித்தொகை கூறும் உண்மைகள், மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை-108.
3. இராசமாணிக்கனார்,மா., - கால ஆராய்ச்சி, அலமு பதிப்பகம், இராயப் பேட்டை, சென்னை-14. முதற்பதிப்பு - டிசம்பர், 2003
4. இளம்பூரணனார் (உ.ஆ.) கௌமாரீஸ்வரி, எஸ். (ப.ஆ) தொல்காப்பியம் பொருளதி காரம், சாரதாப் பதிப்பகம், திருவல்லிக் கேணி, சென்னை-5. மூன்றாம் பதிப்பு- டிசம்பர், 2006
5. தி.வி.க.,- பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை, பாவைப் பப்ளிகேஷன்ஸ், 142, ஜானிஜான் கான்ரோடு, இராயப்பேட்டை, சென்னை-14. மூன்றாம் பதிப்பு-நவம்பர், 2005
6. கிருஷ்ணன்,பெ, திருக்குறள் (தெளிவுரை), பாவை பப்ளிகேஷன்ஸ், 142, ஜானிஜான் கான்ரோடு, இராயப்பேட்டை,-14. இரண்டாம் பதிப்பு-ஆகஸ்ட், 2003
7. நாராயணசாமி ஐயர் - நற்றிணை திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்பு கழகம் 512 டிடிகே சாலை ஆள்வார்பேட்டை சென்னை 18 இரண்டாம் பதிப்பு 2007.
8. அமீதாராணி,நு, சங்ககால மகளிர்நிலை, கட்டுரை மாலை மதிப்பதிப்பகம் பசுமலை, மதுரை-4, முதல் பதிப்பு 2004.
9. கணேசலிங்கண், செ., முருகரத்தினம், தி (ப.ஆ)- பெண்ணியப் பார்வையில் திருக்குறள், இலக்கியக் கட்டுரைகள், ஞாலத்தமிழ்ப் பண்பாட்டு, ஆய்வு மன்றம், மதுரை. பதிப்பு - மே, 2002
10. கடிகாசலம்,ந.ச., (ப.ஆ) - தொல்காப்பியம் பாவியல் கோட்பாடுகள், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-113. முதற்பதிப்பு-1999
11. வேங்கடசாமி, மயிலை. சீனி., -சரவணன், ப., ராசுகுமார், மே.து., (ப.ஆ.)
12. ஆய்வுக்கட்டுரைகள், தொகுதி-2 மக்கள் வெளியீடு, 49, உனிசு அலி சாகிப்தெரு, எல்லிசு சாலை, சென்னை-2.